

அரியலூரில் தனியார் திருமண மண்டபத்தில் இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் சார்பில் தேசிய அளவிலான தொழில் முறை குத்துச்சண்டை வீரர்களுக்கான போட்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். உடன் குத்துச் சண்டை சங்கத்தின் புரமோட்டர் ரஜினிகாந்த், இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் மேற்பார்வையாளர் மணிந்தர்சிங், நகர செயலாளர் இரா.முருகேசன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் கழக தோழர்கள், விளையாட்டு வீரர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி புதிய பேராலயம் திருமண மண்டபத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசிகள் மற்றும் பணியாளர்களுக்கு நல வாரியத்தின் சார்பில் உறுப்பினர்கள் அடையாள அட்டையை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளூர் ஷாநவாஸ், நாகை மாலி, முதன்மை அறங்காவலர் கலிஃபா மஸ்தான் சாஹீத், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி – மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



தமிழ்நாட்டில் ரூ.763 கோடி அளவுக்கு முதலீடுகளை அலிசன் டிரான்மிஷன் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் 13.11.2024 அன்று செய்யப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், தமிழக தொழில் துறை செயலர் அருண்ராய் உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனுள்ளனர்.

### மருத்துவர் பாலாஜியிடம்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் நலம் விசாரித்தார்!

சென்னை, நவ. 15 -

சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் பாலாஜி என்பவரை சிகிச்சை பெற்று வந்த பெண்ணின் மகன் விக்னேஷ் கத்தியால் குத்திய சம்பவம் பெறும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தாக்கப்பட்ட மருத்துவரை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்நிலையில் சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மருத்துவர் பாலாஜியிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி வாயிலாக நலம் விசாரித்துள்ளார்.

அப்போது, மருத்துவர் பாலாஜியின் உடல்நலம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

### பள்ளிகளில் 10,000 போலி ஆசிரியர்களைக் கொண்டு பாடம் நடத்துவதாக

# சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது!

## பள்ளிக் கல்வித்துறை மறுப்பு!

சென்னை, நவ. 15 -

7.11.2024 நாளிட்ட செய்தித் தாளின் ஒன்றில் வெளிவந்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளபடி, தருமபுரி மாவட்டம், அரூர் கல்வி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியம் இராமியாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த கே. பாலாஜி என்பார், தனக்கு பதிலாக வேறொரு நபரைக் கொண்டு வகுப்பறையில் பாடம் நடத்தியதால் தற்காலிக பணிநீக்கம் செய்யப் பட்டார்.

மேற்காணும் பொருள் குறித்து தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் பள்ளியில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு; ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளாமல் வெளி நபரைக் கொண்டு மாணவர்களுக்கு கற்பித்தல் பணி நடத்துவது குறித்து, பள்ளி ஆண்டாய்வு மற்றும் பள்ளிப் பார்வையின் போது ஏதேனும் கண்டறியப்பட்டாலோ அல்லது இது குறித்த புகார்கள் ஏதேனும் பெறப்பட்டாலோ கண்டிப்பாக அப்புகார் மீது தனிக்கவனம் செலுத்தி மாவட்டக் கல்வி அலுவலரே (தொடக்கக் கல்வி) விசாரணை மேற்கொண்டு, அவ்விசாரணையில் உண்மையிருப்பின் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு இறுதியாணை பிறப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படும்போது அத்தகவலை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அளிக்கத் தவறும் பட்சத்தில், தலைமை ஆசிரியர் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் ஆகியோர் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தொடக்கக் கல்வி அலகில் தகுதியுள்ள காலிப்பணியிடத்தில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் (SMC) நியமனம் பெற்ற 6053 எண்ணிக்கையில் உள்ள தற்காலிக ஆசிரியர்கள் தவிர, வேறு ஏதேனும் நபர்கள் பணிபுரிந்து வருகிறார்களா என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களிடமும் அறிக்கை கோரப்பட்டது.

இவ்வியக்ககச் செயல்முறைகள் அனுப்பப்பட்ட நிலையில், மாவட்டக் கல்வி அலுவலரின் ஆளுகைக்கு உட்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்களிடமிருந்து வேறு நபர்களைக் கொண்டு கற்பித்தல் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள் குறித்த விவர அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

ஆகையால், மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படாத நிலையில், சமூக ஊடகங்களில் வரப் பெற்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறான செய்தியாகும். அச்செய்திக் குறிப்பில் குறிப்பிட்டவாறு 10,000 போலி ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு கற்பித்தல் பணிகள் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறது எனறு பள்ளிக் கல்வித் துறை வெயிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில்

# அ.தி.மு.க. - பா.ம.க. - தே.மு.தி.க. கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

கடலூர், செப். 15 -

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம், சந்தை வெளிபேட்டை கிராமத்தைச் சேர்ந்த மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பாக்கியலட்சுமி கல்யாண சுந்தரம் தலைமையில், அ.தி.மு.க. அழகேசன், குமார், பா.ம.க. பிரகாஷ், துரை, உதயகுமார், வசந்தா, த.வா.க. பார்த்திபன், மோகனா, விமலாதேவி ராஜேஸ்வரி, ராதிகா உள்ளிட்ட அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க., த.வா.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட பல்வேறு கட்சியில் இருந்து விலகி சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

இதனைத் தொடர்ந்து பண்ருட்டி ஒன்றியம் மேட்டுகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த தேமுதிக சக்திவேல், த.வா.க கனகவேல், பா.ம.க சந்தோஷ்குமார், ஜெயராமன், அ.தி.மு.க சாமிதுரை, தே.மு.தி.க. உத்திராட்சம் உள்ளிட்ட சுமார் 60க்கும் மேற்பட்டோர் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கட்சியில் இணைந்தவர்களை வரவேற்று

சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பேசுகையில், தி.மு.க.வில் புதிதாக இணைந்த அனைவருக்கும் பல்வேறு பதவிகள் வர வாய்ப்புள்ளது. குறிப்பாக கட்சியில் உழைப்பவர்களுக்கு வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட வாய்ப்பு தரப்படும் என பேசினார். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் உறுப்பினர் படிவங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. ஒன்றியச் செயலாளர் குணசேகரன், ஒன்றியப் பொருளாளர் ஐயப்பன், பொதுக் குழு உறுப்பினர் அறிவழகன், ஒன்றிய துணைச் செயலாளர் ஏழுமலை, குறிஞ்சிப்பாடி ஒன்றிய செயற்குழு உறுப்பினர் கல்யாணசுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் மறைந்த 144 கழக உறுப்பினர்

# குடும்பத்தினருக்கு ரூ.14,44,000 மதிப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், நவ. 15 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் சேந்தமங்கலம் ராசிபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நிதி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே ஆர் என். இராஜேஸ் குமார் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, மங்களபுரம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 3 மாதங்களில் உடல் நல குறைவு மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்த கழக உறுப்பினர் குடும்பத்தினருக்கு கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சியானது நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் கலந்து கொண்டு கடந்த 3 மாதங்களில் உயிரிழந்த 144 கழக உறுப்பினர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, அவர்களது குடும்பத்திற்கு தலா ரூ.10,000 வீதம் ரூ.14,44,000 ரூபாய் மதிப்பில் தலைவர் கலைஞர் குடும்ப நலநிதியை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி, சீராப்பள்ளி பேரூராட்சி செயலாளர்கள் என்.செல்வராஜ், நாமகிரிப்பேட்டை கே.அன்பழகன், புதுப்பட்டி பி.ஜெயக்குமார், மருத்துவர் அணி பாண்டியன், ஊராட்சி மன்ற தலைவர் முருகப்பன், சார்பு அணி அமைபாளர்கள் கிருபாகரன், சண்முகம், துணை அமைப்பாளர்கள் ரமேஷ்குமார், ஜெகதீசன், சாதிக்பாட்ஷா, மணி, ராகவன், நிர்வாகிகள் இளையப்பன், கேசவன் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




கூனம்பட்டி ஊராட்சி ஸ்ரீ காமாட்சி அம்மன் செங்குந்தர் திருமண மண்டபத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் வெ.ராஜா தலைமையில் நடைபெற்ற பெருந்துறை சட்டமன்றத் தொகுதி, ஊத்துக்குளி மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் மருத்துவர் ஆர்.மகேந்திரன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், பெருந்துறை தெற்கு ஒன்றியச் செயலாளர் சாமி உள்பட BLA2 மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

